# கேரள தமிழக மேல்நிலைப் பள்ளித் தமிழ்ப் பாடத்திட்டத்தில் பண்பாட்டுப் பதிவுகள்

# Cultural Entries in Kerala Tamil Higher Secondary School Tamil Curriculum

*முனைவர் ரா. பால்ராஜ்*
முதுமுனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
கேரளப்பல்கலைக்கழகம், காரியவட்டம்

**Dr. R. Paulraj**
*Post Doctoral Fellow, Department of Tamil*
*University of Kerala, Karyavattam*

## ஆய்வுச் சுருக்கம்

*பண்பாடானது இசை, ஓவியம், இலக்கியம், வாழ்க்கைமுறை, உணவு, சிற்பம், நாடகம், திரைப்படம் போன்ற மனிதருடைய கலைப் பொருள்களிலும் நடவடிக்கைகளிலும் வெளிப்படுகின்றது. சில அறிஞர்கள் பண்பாட்டை நுகர்வு, நுகர்பொருட்கள் என்பவற்றின் அடிப்படையில் அடையாளம் காண்கின்றனர். ஆனால் மானிடவியலாளர், பண்பாடு என்பது நுகர் பொருட்களை மட்டுமல்லாது அவற்றை உருவாக்குவனவும் அவற்றுக்குப் பொருள் கொடுப்பனவுமான வழிமுறைகளும் பொதிந்துள்ள சமூகத் தொடர்புகள் செயல்முறைகள் என்பவற்றையம் குறிப்பதாகக் கூறுகிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை பண்பாடு என்பது கலை, அறிவியல் நெறிமுறைகள் போன்ற அனைத்தையும் உள்ளடக்கியது.*

***முக்கியச் சொற்கள்:*** *பண்பாட்டுப் பதிவுகள், இலக்கியம், வாழ்க்கைமுறை, அறிவியல் தொழில் நுட்பங்கள்.*

## Abstract

*Culture manifests itself in human objects and activities such as music, painting, literature, lifestyle, food, sculpture, drama and cinema. Some scholars identify culture in terms of consumption and consumer goods. Anthropologists, on the other hand, say that culture refers not only to consumer goods but also to the social relations and processes involved in the means of creating and supplying them. For them, culture encompassed art, science, ethics and so on.*

***Keywords:*** *Cultural Records, Literature, Lifestyle, Science and Technology*

**Citation**

Paulraj, R. "Cultural Entries in Tamil Higher Secondary School Tamil Curriculum." *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 3, 2024, pp. 1–6.

**கலாச்சாரப் பண்பாடு**

*கலாச்சாரப் பண்பாடுகள் வரும் தலைமுறைகளுக்கு எடுத்துக் கூறவேண்டிய கட்டாயம் ஒருபுறம் இருக்க இன்றைய சமூகத்தில் கலாச்சாரப்பண்பாடு மிகவும் சீர்கேடு அடைவதையும் நாம் பார்க்க முடிகிறது. அதே நேரத்தில் கிராமங்களில் இன்றும் அடி முடி மாற்றம் இல்லாமல் இன்றும் கலாச்சாரப் பண்பாடுகளை பாதுகாக்க கூடிய வழக்கம் இருந்து வருகின்றது என்பதை பார்க்க முடிகின்றது.*

*இவையெல்லாம் அறிவியல் தொழில் நுட்பங்களால் ஏற்பட்டாலும் இன்றைய இளைய சமுதாயத்திடம் குறிப்பாக மாணவ செல்வங்களுக்கு எளிதில் கலாச்சாரப் பண்பாடுகளை புரிந்து கொள்வதற்கும், நடைமுறைப்படுத்தவும் புத்தகங்கள் மிகவும் துணைப்புரிகின்றன என்பதில் சந்தேகம் இல்லை. பண்பாடுகள் இடத்திற்கு இடம், மொழிக்கு மொழி, சூழலுக்கு சூழல் மாறுபடும்போது இவையெல்லாம் ஒரு குடையின் கீழ் படித்து தெரிந்துக் கொள்ளக் கூடிய இடமாக புத்தகம் திகழ்கின்றது என்பதை பாடத்திட்டத்தின் வழியாக அறிந்துக் கொள்ள முடிகிறது. பல பாடத்திட்டங்கள் பல்வேறு மக்களுக்கு சுற்றுலா வழிகாட்டியாகவும் இருக்கிறது என்பதை அறியமுடியும்.*

**பாடத்திட்டம்**

*இந்தியாவின் உயரிய ஆன்மிக தலைவர்களில் ஒருவரான - சுவாமிஜி(விவேகானந்தர்) கூறியது.*

*கல்வி என்பது பல கருத்துகளால் மனதை நிரப்புவதில்லை ஒருவரின் மனதின் முழுமயான தேர்ச்சியைப் பெறுவது தான் சிறந்த கல்வி. பாடத்திட்டம் என்பது ஒரு கல்வி நிறுவனத்தில் ஆசிரியரால் கற்பிக்கப்படும் பாடங்கள் மற்றும் மதிப்பீடுகளின் தொகுப்பாகும் அல்லது வேறு விதமாகச் சொல்வதனால் ஒரு ஆசிரியரால் ஒரு நிறுவனத்தில் கற்பிக்கப்படும் போது ஒரு மாணவர் பெறும் அனுபவங்'களின் மொத்தத்தை இது விவரிக்கிறது.*

**பாடத்திட்டம் ஏன் முக்கியமானது**

*ஒரு பாடத்திட்டம் முக்கியமானது, ஏனெனில் அது ஒரு கல்வி நிறுவனத்தில் கற்பிக்கப்படுவதற்கு சில ஒழுங்குகளை விதிக்கிறது. மற்றும் மிக முக்கியமாக பாடத்தின் இறுதிப் புள்ளியில் எதை அடைய வேண்டும் என்பது பற்றிய தெளிவான எதிர்பார்ப்புகளை இது ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இருவருக்கும் தெரிவிக்கிறது. ஒரு பாடத்திட்டத்தை வைத்திருப்பது மாணவர்கள் நிறுவனங்களுக்கு இடையில் தேர்ச்சி பெற அனுமதிக்கிறது. மேலும் அவர்கள் முன்னேறி மேலும் தகுதிகளைப் பெறலாம். ஆரம்ப மற்றும் இடைநிலைப் பள்ளி மட்டத்தில் பல மாணவர்கள் பள்ளிகளுக்கு இடையில் செல்வார்கள். இதனால்தான் பாடத்திட்டம் முக்கியமானது. பள்ளிகள் தரப்படுத்தப்பட்டு, மாணவர்கள் ஒரு பள்ளியிலிருந்து மற்றொரு பள்ளிக்கு மாறுவதால் கற்ப்பிப்பதில் சிரமப்பட மாட்டார்கள் அல்லது தவறவிட மாட்டார்கள்.*

*பாடத்திட்டம் என்பது கல்வி அல்லது பயிற்சி வகுப்புகளில் நடப்புக் கல்வியாண்டில் பயிலும் மாணவர்களுக்குக் கற்பிக்கப்படும் கற்கை நெறிகளைக் கொண்ட விரிவான பட்டியல் ஆகும். பள்ளி கல்லூரி மாணவர்கள் தத்தம் தங்கள் கல்வியாண்டில் கற்றுக் கொள்ள வேண்டியவற்றை கல்வித்துறை பல்கலைக்கழகங்கள் மூலமாக அரசாங்கம் சிறு சிறு வல்லுநர் குழுக்களை உருவாக்கி பள்ளி மாணவர்களுக்குப் புத்தகங்களாகவும் கல்லூரி மாணவர்களுக்குப் பாடத்திட்டமாகவும் திட்டமிடுகிறது.*

**கேரளப் தமிழ்ப் பாடத்திட்டத்தில் பண்பாட்டுப் பதிவுகள்**

*கேரளத்துக் கோவில்களில் உற்சவ காலங்களில் நடனவழிபாடாக நடத்தப்படும் ஒரு கிராமியக் கலைவடிவம் படையணி. இது கேரளத்திலுள்ள பலரும் அதிகம் பார்த்திராத மிகவும் ஆவலுடன் பார்க்க விரும்பும் கலைவடிவமாகும்.*

*வெகு அபூர்வமான இந்தக் கலைவடிவம் கேரளத்தில் உள்ள பத்தனந்திட்டா, ஆலப்பழை போன்ற மாவட்டங்களில் அதிகமாகவும் கொல்லம், கோட்டயம் போன்ற மாவட்டங்களில் ஒரு சில இடங்களிலும் திருவிழாக் காலங்களில் நடத்தப்படுகிறது. இந்த கிராமிய நடன வழிபாடு கேரளத்திலுள்ள பகவதி கோவில்களில் நிகழ்த்தப்படுகிறது. சில கோவில்களில் ஏழு நாட்களும் சில கோவில்களில் பதினாறு நாட்களும் சில கோவில்களில் இருபத்தி எட்டு நாட்களும் நடன வழிபாடு நடக்கிறது.*

*படையணி என்றால் அணிவகுத்துச் செல்லும் படை என்று அர்த்தம். ஆனால் இந்தப் படையணி நடன வழிபாட்டில் கோலம் என்று மலையாளத்தில் கூறப்படும் ஒரு உருவத்தைச் தன் தலையில் பெரிய உயரமான கிரீடம் போன்று அணிந்து கொண்டு பல ஆட்கள் அணி வகுத்துப் போவதையே பார்க்கின்றோம்.*

*இதுபோன்று கேரள மாநிலத்தின் வடக்குப் பகுதிகளாக இருக்கக்கூடிய கண்ணூர், காசர்கோடு மாவட்டங்களில் நடத்தப்படும் பண்பாட்டுக் கலைவடிவம் தெய்யம. "இக்கலை பாரம்பரிய மரபையும் கிராமியப் பண்பையும் கொண்டு நிகழ்த்தப்படுகிறது. பேய், பூதம், வீர மரண மடைந்தவர், சமூக சீர்த்திருத்தவாதிகள் போன்றோரை நினைவுக்கூறும் விதமாக அவர்களைப் போலவே வேடமிட்டு ஆடுதலே தெய்யம். அதாவது நாட்டார் தெய்வங்களாக அடையாளப்படுத்தப்படுகின்ற சில சிறுதெய்வங்களின் வேடங்களைப் புனைந்து ஆடுதல். தெய்வம் என்னும் சொல் உருமாறி தெய்யம் என்று கூறப்படுகிறது. பக்கம். (27-28)-11ஆம் வகுப்பு மேல்நிலைப்பள்ளி, கேரளா*

**பண்டையத் தமிழர் திருமணம்**

***உழுந்து தலைப்பெய்க் கொழுங்களி மிதவை***
***பெருஞ்சோற்று அமலை நிற்ப நிரைகால்***
***தண்பெரும் பந்தர்த் தருமணல் ஞெமிரி***
***மணவிளக் குறுத்து மாலைத் தொடரிக்***
***கனைஇருள் அகன்ற கவின்பெரு காலைக்***

***ப(47)அகம்-86- மேனிலை இரண்டாம் ஆண்டு, தமிழ்நாடு***

*இப்பாடல் சங்கத் தமிழர்களின் திருமணம் எவ்வாறு நடைபெற்றது என்பதைப் படம் பிடித்துக் காட்டுககின்றது.*

**திருமணம் விருந்தும் திருமண நிகழ்வும்**

*தீய கோள்களின் தொடர்பு நீங்கிய ரோகினி என்னும் நாளில் அழகிய காலை நேரத்தில் உளுந்த வடையுடன் விருந்துணவு படைக்கப்பட்டது. பந்தற்கால் நட்டுப் பந்தல் போடப்பட்டது. அந்தப் பந்தலில் புதமணல் பரப்பப்பட்டது. மனையில் விளக்கு ஏற்றி வைக்கப்பட்டது. மாலைகள் தொடங்கிவிடப்பட்டன.*

**தமிழர் குடும்பமுறை**

**குடும்பம்**

*குடும்ப அமைப்பு ஏற்படுவதற்கு அடிப்படை, திருமணமே, குடும்பம், திருமணம் இரண்டும் ஒன்றையொன்று சார்ந்தே செயல்படுகின்றன. நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போல இன்று நாம் வழங்கும் ''திருமணம்'' குடும்பம் ஆகிய இரண்டு சொற்களுமே தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியங்களிலும் இடம்பெறவில்லை. குடும்பம் எனும் சொல் முதன்முதலில் திருக்குறளில் தான் (1029) பயின்று வருகிறது.*

***குடும்பு-எனும் சொல் கூடி வாழுதல் என்று பொருள்படுகின்றது.***

**தாய்வழிக் குடும்பம்**

*சங்க காலத்தில் தலைமைப் பொறுப்பை தாயே எற்றிருந்தாள். தாய்வழியாகவே குலத்தொடர்ச்சி குறிக்கப்பட்டது. பதிற்றுப்பத்து - சேரநாட்டு மருமக்கள் தாயமுறை இதற்குக் சிறந்த (எடுத்துக்காட்டு) அதுமட்டுமல்லாமல் (புறம் -270, 276, 277, 273)*

*கலித்தொகை -பாலை 8 போன்றப் பாடல்களில் ''இவளது'' ''மகன்'' என்றே கூறப்பட்டது.*

*சங்ககாலத்தில் பெண் திருமணம் செய்த பின்னரும் தன் இல்லத்திலேயே தொடர்ந்து வாழ்க்கை நடத்தும் தாயமுறை இருந்துள்ளது -(அகம் -24: 10)*

*சொத்துக்களும் வளங்களும் செல்வங்களும் பெண்களுக்குக் சென்று சேர்ந்தன. என்பது இலக்கியங்கள் வழியாக அறியமுடிகிறது.*

**தந்தைவழிக் குடும்பம்**

*மனித குலத்தில் ஆதியில் தோன்றி வளர்ந்த தாய்வழி முறையானது தமிழர்களிடம் இருந்ததைச் சங்க இலக்கியங்களின்வழி அறிய முடிந்தாலும் சங்க காலத்திலேயே ஆண் மையச் சமுகமுறை வலுவாக வேர் ஊன்றிப் பரவலாகி விட்டதையும் காணமுடிகிறது.*

***நும்மனைச் சிலம்பு கழீ, அயரினும்***
***எம்மனை வதுவை நல்மணம் கழிக***
***இதன்வழி மனமக்களின் வாழ்விடம் கணவன் அகம்***
***என்பதை உறுதிப்படுத்தலாம்.*** ***(ஐங்குறுநூறு- 399 : 1-2)***

*இதேப்போன்று தனிக்குடும்பம், கூட்டுக்குடும்பம் போன்றவற்றை (ஐங்குறுநூறு 401, புறநானூற்றுப்பாடல் -279) கூறுகிறது.*

**விருந்தினர் இல்லம்**

***மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து***
***நோக்கக் குழையும் விருந்து***

*அறம் இல்லறவியல் விருந்தோம்பல் பண்பு என்பது குடும்பத் தலைவிக்கு உண்டு என்பதை திருக்குறள் மற்றும் நற்றிணைக் குறிப்பிடும். நடு இரவில் விருந்தினர் வந்தாலும் மகிழ்ந்து வரவேற்று உணவிடும் நல்லியல்பு குடும்பத் தலைவிக்கு உண்டு என்பது நற்றிணையின் செய்தி அதையே தாகங்கொண்ட மீனொன்று என்ற- தலைப்பில் - என் - சத்தியமூர்த்தி - மொ.பெயர்ப்பு (செய்யுள்)*

<table>
<tr><td>எதிர்பாராத நிகழ்வுகளை</td><td rowspan="2">உருவகப்படுத்தியுள்ளார்</td></tr>
<tr><td>எதிர்பாராத விருந்தாளிகளாக</td></tr>
</table>

*என்பதை செய்யுளின் வழியாக அறிய முடிகிறது.*

**கம்பராமாயணம்**

1. 'யாவரும் கேளிர்' என்பது தமிழர் நற்பண்பின் வளர்ச்சி
2. சிறியோரை இகழ்தல் இலமே! என்பது அந்நற்பண்பின் மலர்ச்சி
3. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்பது அவ்வுயிர்ப்பண்பின் முதிர்ச்சி
4. காக்கை குருவி எங்கள் ஜாதி என்பது அத்தமிழ்ப்பண்பின் தொடர்ச்சி
5. தந்தை, தாய் மீதான அன்பு
6. உடன் பிறப்பை எல்லைகள் கடந்து ராமன் விரிவுப்புடுத்துகிறான்
7. வேடன், பறவை, எளிய முதியவள், வானரம், எதிரியின் தம்பி என்ற வேலிகள் அவன் அன்பிற்கு இல்லை

*கம்பராமாயணம் பல்வேறுவிதமான பண்புகளை அடிப்படையாக கொண்டப் பாத்திரங்களால் படைக்கப்பட்டிருக்கிறது. இராமன் அனைத்து உயிர்களையும் கீழ் மேல் எனக் கருதாது சமமாக அன்பு காட்டும் பகுதிகள் பாடமாக இடம்பெற்றுள்ளன. அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தா காண்டம், யுத்தகாண்டம் ஆகியவற்றிலிருந்து குகன், சடாயு, சவரி, சுக்ரீவன், வீடணன் ஆகியோரைப் பற்றிய பாடல்கள் (கம்பராமாயணம், 1994, 1995, 3356, 3700,3701, 3806, 3812) தமிழக தமிழ்ப் பாடத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. இப்பாடல்கள் வழியாக உடன் பிறக்காத நண்பர்களையும் உடன்பிறப்பாக ஏற்றுக்கொள்கிற உன்னதப் பண்பு சிறந்தப் பண்பாகத் திகழ்கிறது.*

**நிலத்திற்கும் மனிதருக்கும் உரிய பண்பாடு**

*நிலம் சடப்பொருள் அல்ல. நிலத்தோடு பேசக்கூடிய மனிதர்கள் இன்றைக்கும் கிராமங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். வருவாய் பெரிதாக வரவில்லலை என்றாலும் நில உரிமை, நிலம் சார்ந்த வேளாண்மை ஆகியவற்றை ஒரு பண்பாடகவே கொண்டிருக்கிற பண்பாடு' எவ்வழி நல்லவர் ஆடவர். அவ்வழி நல்லை வாழிய நிலனே' என்னும் பழம்பண்பாட்டு மரபை நினைவூட்டுகிறது. மேலும் கரிசல் நாட்டுப் பகுதிகளைப் பேச்சுவழக்கில் தந்திருப்பது. மிகவும் இனிமையாக இருக்கிறது. உரிமைத்தாகம் - பூமணி சிறுகதை (துணைப்பாடம்)*

**பயன்கள்**

1. பண்பாடுகள் இடத்திற்கு இடம் மாறுபடுவதைப் பாடத்திட்டத்தின் வழியாக அறிய முடிகிறது.
2. பல பாடத்திட்டங்கள் சுற்றுலா வழிகாட்டியாகத் திகழ்கிறது என்பதை தெரிய முடிகிறது.
3. பாடத்திட்டங்கள் வழியாகக் கலாச்சாரப் பண்பாடுகளை மீட்டுருவாக்கம் செய்ய முடிகிறது.

**முடிவுரை**

*அறிவியல் தொழில் நுட்பங்களால் பண்பாடு என்பது கேள்வி குறியாக மாறிக்கொண்டிருக்கின்ற காலத்தில் நாம் இருக்கிறோம். இன்றைய பண்பாடுகள் எல்லாம் சடங்குகளாகச் சுருங்கி வருகிறது. அதே நேரத்தில் மாணவர்களிடத்தில் பண்பாடுகளை வெளிக்காட்ட வேண்டிய சூழல் நாம் அனைவருக்கும் இருக்கின்றது சங்கப்பாடல்களின் வாயிலாக தமிழர்களின் வாழ்வும் பண்பாடும் இன்றைய மக்களுக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. அதன் அடிப்படையில் பாடத்திட்டத்தின் வழியாகப் பண்பாடுகளை எளதில் மாணவர்களிடத்தில் கொண்டு சேர்க்க முடிகிறது என்பதை இக்கட்டுரையின் வழியாக விளக்க முடிகிறது.*

**அடிக்குறிப்புகள்**

1. கலித்தொகை, அடி : 133
2. அகநானூறு - அடி : 86
3. கம்பராமாயணம் - பாடல் 94,1995, 3356, 3700, 3701, 3806, 3812
4. ஐங்குறுநூறு - அடி 399:1-2
5. திருக்குறள் - 1029
6. புறநானூறு, 270, 276

**பார்வை நூல்கள்**

1. பக்தவத்சலபாரதி, பண்பாட்டு மானிடவியல்
2. இ.சுந்தரமூர்த்தி, இலக்கியமும் பண்பாடும்
3. தொ.பரமசிவன், பண்பாட்டு அசைவுகள்
4. கேரள தமிழக மேல்நிலைப்பள்ளி பாடநூற்கள்

## References

1. Bhaktavatsalabharati, Cultural anthropology.
2. Sundaramurthy, E., Literature and Culture.
3. Paramasivan, T., Cultural Movements
4. Kerala Tamizh Higher Secondary School Textbooks